**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**C.C. 73/2025**

LW: 9 PW :7

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. G. புனிதா, நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இந்திராகாந்தி | க / பெ. | : | ராக்கையன் |
| கிராமம் | : | கானூர் பருத்திக்கோட்டை | தாலுக்கா | : | நீடாமங்கலம் |
| தொழில் | : | இல்லத்தரசி | வயது | : | 55 |

LW: 9 PW:7

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல்விசாரணை**

அசாஆ 6 எனது கணவராகும். நான் பாமணி கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக இருந்தேன். நான் அந்த சங்கத்தில் ரூ.25 ஆயிரம் விவசாயம் செய்ய கடனாக பெற்றேன். என்னிடம் காட்டப்படும் வரிசை எண் 87 ல் உள்ள என் பெயரில் உள்ள பணம் எடுக்கும் சீட்டிலும் கணக்கு வைத்திருப்பவர் என்ற இடத்திலும் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல. அதே சீட்டில் பின்பக்கத்தில் கணக்கு வைத்திருப்பவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **கையெழுத்து மட்டும் அதசாஆ 24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரிவு 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார் அந்த வாக்குமூலத்தில் வரிசை எண் 51 ல் உள்ள இரண்டு பக்கங்களிலும் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **வாக்குமூலம் அதசாஆ 25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2) நான் 3ம் வகுப்புவரைதான் படித்துள்ளேன். போலிசார் நான் கோர்ட்க்கு வந்தவுடன் என்னிடம் ஒரு பேப்பர் தந்தார்கள். அதை எனது கணவர் படித்துக்காண்பித்தார். அந்த பேப்பரை கையில்வைத்துக்கொண்டுதான் சாட்சியமளிக்கிறேன். CCIW போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் சொல்கிறேன் என்றாலும் நான் சொன்னசாட்சியம் உண்மையல்ல என்றும் சொன்னால் சரியல்ல. கூட்டுறவு சங்கத்தில் உள்ள விவரம் நடைமுறை எனக்கு தெரியாது என்றாலும். லோன் எவ்வளவு விவசாய கடனுக்குரிய உரம் எவ்வளவு என்றாலும் லோன்க்கு உள்ள காப்பீடு எவ்வளவு என்றும் தெரியாது. என் கணவர் கையெழுத்து போடச்சொன்னால் நான் போடுவேன்.

3) அதசாஆ 24 மற்றும் 25 ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எந்த நேரத்திலும் எந்ந இடத்திலும் எவ்வத வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

LATHA Digitally signed by LATHA Date: 2025.09.03 16:39:39 +0530

தலைமை நீதித்துறை நடுவர் ,

திருவாரூர்